முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்.
முன்னிலை: திரு. இரா.வேலரஸ், B.Sc.,B.L., LL.M.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.
2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 12–ம் நாள் வியாழக்கிழமை

மேல்முறையீட்டு வழக்கு எண். 27/2022
(CNR. No. TNSA 01–002143–2022)

1. முனியன்

2. சுரேஷ்குமார்

3. ரமேஷ்குமார் ... மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள்

/ எதிர்/

மைனர் கமலேஷ்குமார்
சார்பாக அடுத்த தோழி/ தாயார்
லலிதா .... எதிர்மனுதாரர்/வாதி

ஓமலூர், சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.243/2018– என்ற வழக்கில் 03.01.2022–ம் தேதி வழங்கிய தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து இந்த மேல் முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இடையே

மைனர் கமலேஷ்குமார்
சார்பாக அடுத்த தோழி/ தாயார்
லலிதா .... வாதி

/எதிர்/

1. முனியன்

2. சுரேஷ்குமார்

3. ரமேஷ்குமார் ......பிரதிவாதிகள்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:58:00 +0530

இந்த மேல்முறையீடு 23.02.2026ம் தேதி என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மேல்முறையீட்டாளர்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.N.D.குலசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.சத்தியமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்டும், மேல்முறையீட்டு விவரக் குறிப்பில் கூறப்பட்டுள்ள காரணங்களை பரிசீலித்தும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை, தீர்ப்பாணை மற்றும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் :–

<u>தீர்ப்புரை</u>

ஓமலூர், சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.243/2018– என்ற வழக்கில் 03.01.2022–ம் தேதி வழங்கிய தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து இந்த மேல் முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>விசாரணை நீதிமன்றத்தில் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கின் வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு :–</u>

இவ்வழக்கின் 2-ம் பிரதிவாதி மைனர் வாதியின் தகப்பனார். 2-ம் பிரதிவாதிக்கும், மைனர் வாதியின் தாயார் லலிதா என்பவருக்கும் இருவீட்டார் சம்மதத்துடன் ஓமலூர் வட்டம், சரக்கபிள்ளையூர் ஸ்ரீசுபம் திருமண மண்டபத்தில் நல்ல முறையில் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது 2-ம் பிரதிவாதி கர்நாடக மாநிலம் பெங்களூரு விமான நிலையத்தில் CISF – உதவி காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தார். திருமணத்திற்கு பின்னிட்டு சுமார் ஒரு மாத காலம் மட்டுமே 2-ம் பிரதிவாதி மைனர் வாதியின் தாயாருடன் சந்தோசமாக குடும்பம் நடத்தி வந்துள்ளார். அதன் பின்னர் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் மற்றும் 1-ம் பிரதிவாதியின் மனைவியும்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:58:18 +0530

மைனர் வாதியின் தாயாரை பலவகையிலும் தொந்தரவு செய்து வந்தார்கள். இந்நிலையில் கடந்த 14.01.2014-ம் தேதியன்று ஓமலூர் வட்டம், தாரமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மைனர் வாதி பிறந்தார். இந்நிலையில் மைனர் வாதி கருப்பாக இருக்கிறார் என்றும், அவர் தனக்கு பிறக்கவில்லை என்றும் கூறி மைனர் வாதியின் தாயாரை மிகவும் கொடுமை செய்தார்கள். மைனர் வாதியின் தாயாரை அவர் குடும்பத்தினர் 2-ம் பிரதிவாதியுடன் சேர்த்து வைக்க செய்த அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்தது. இந்நிலையில் 2-ம் பிரதிவாதி மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் H.M.O.P.No.35/2015 – என்ற வழக்கை தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகிறது. கடந்த 04.10.1991–ம் தேதி 1–ம் பிரதிவாதி மற்றும் அவர் குடும்பத்தினருக்கிடையே பத்திர எண்.1305 /1991, ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 1–ம் பிரதிவாதியின் பூர்வீக பிதுரார்ஜித சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டு அதில் D–அட்டவணை சொத்து 1–ம் பிரதிவாதிக்கு பாகமாக பிரிக்கப்பட்டது. மைனர் வாதியின் தந்தையான 2–ம் பிரதிவாதிக்கு 2/6 பாகமும், மற்ற பிரதிவாதிகளுக்கு 2/6 பாகமும் உள்ளது. தாவா சொத்துக்களை கடந்த 16.03.2001–ல் பிரதிவாதிகள் காடையாம்பட்டி காட்டுவளவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் குதவை வைத்து ரூ.46,000/– கடன் பெற்றனர். அதேபோல் மேற்படி சொத்துக்களின் பத்திரத்தை 21.03.2013 ல் அடமானம் வைத்து ஸ்டேட் வங்கியில் ரூ.2,95,000/– கடனும் பெற்றனர். 2 ம் பிரதிவாதிக்கு சேரவேண்டிய 2/6 பாகத்தில் இந்த மைனர் வாதிக்கு 1/6 பாகம் சட்டப்படி பாகபாத்யம் உள்ளது. மைனர் வாதியையும், அவரின் தாயாரையும் ஏமாற்றும் நோக்கிலும் பிரதிவாதிகள் ஒன்று சேர்ந்து தாவா சொத்துக்களை 3–ம் நபருக்கு கிரயம் செய்து பணம் பெற விலை பேசியும்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:58:27 +0530

வருகிறார்கள். மைனர் வாதியின் பாகத்தை தாவா சொத்துக்களில் இருந்து பிரித்து பதிவு செய்து கொடுக்க சொல்லி கடந்த 28.05.2015–ல் மைனர் வாதியின் தாயாரும், அவர் குடும்பமும் பலமுறை முயற்சி செய்தபோது பிரதிவாதிகள் பாகம் தர மறுத்ததுடன் சொத்துக்களை விற்பனை செய்ய போவதாக மிரட்டி விரட்டி விட்டனர். தாவா சொத்து மைனர் வாதிக்கு பிதுரார்ஜித பூர்வீக சொத்துக்களாகும். சட்டப்படி மைனர் வாதிக்கு மேற்படி தாவா சொத்துக்களில் பாகம் பெற உரிமையுண்டு எனவே வாதியால் பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>விசாரணை நீதிமன்றத்தில் 1–ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2 மற்றும் 3 – பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பதிலுரையின் சுருக்கம் பின்வருமாறு</u> :–

இவ்வழக்கு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. இப்பிரதிவாதிகளால் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர இதர சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். இவ்வழக்கை மைனர் கமலேஷ் குமாருக்காக தாக்கல் செய்துள்ள அவரது தாயார் லலிதா என்பவரால் திட்டமிட்டு துர்லாபம் அடையும் நோக்கத்துடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கின் 2–ம் பிரதிவாதி சுரேஷ்குமார் லலிதா மீது HMOP.No.35/2015 – என்ற விவாகரத்து மனுவை மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததால் அவரது குடும்பத்தினர்களான பிரதிவாதிகள் மீது பழிவாங்கும் எண்ணத்தில் இந்த வழக்கை மைனர் கமலேஷ்குமாரை முன்னிறுத்தி கெட்ட எண்ணத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. லலிதாவிற்கும் 2–ம் பிரதிவாதிக்கும் கடந்த 13.03.2013 அன்று திருமணம் நடைபெற்றது என்பது உண்மை. திருமணத்தின்போது 2–ம் பிரதிவாதி கர்நாடக மாநிலம் பெங்களூரு விமான

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:58:34 +0530

நிலையத்தில் CISF – உதவி காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தார் என்பது பொய்யான சங்கதியாகும். உண்மையில் திருமணத்தின்போது டில்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் மத்திய தொழில் பாதுகாப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தார் என்பதே உண்மை. மேலும் மைனரின் தாயார் லலிதாவை பலவகைகளில் கொடுமைகள் செய்ததாக கூறுவது தவறானதாகும். மைனரின் தாயார் லலிதாவின் சகோதரர்கள் காவல்துறையில் காவலர்களாக இருப்பதை சாதகமாக வைத்துக்கொண்டு பிரதிவாதிகளை தொந்தரவு செய்து வந்தார். 2–ம் பிரதிவாதி லலிதா செய்த கொடுமைகள் குறித்து 31.01.2015 தேதியிலேயே வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினார். மேற்படி அறிவிப்பிற்கு பொய்யான காரணங்களை கூறி 12.02.2015 அன்று லலிதா தனது வழக்கறிஞர் மூலம் பதிலறிவிப்பு அனுப்பினார். அதன்பின்னிட்டு 2–ம் பிரதிவாதி மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் H.M.O.P.No.35/2015 – என்ற வழக்கை தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகிறது. பணப்பலன் பெறவும், சொத்தை அடையும் கெட்ட எண்ணத்துடன்தான் 2–ம் பிரதிவாதியை திருமணம் செய்துகொண்டதாக மேற்படி லலிதாவே 2–ம் பிரதிவாதியிடம் வெளிப்படையாக கூறியுள்ளார்.

4. மேலும் 04.10.1991 தேதிய பாகப்பத்திரத்தில் இந்தப் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட பாகம் அந்தப்பத்திரம் எழுதப்பட்ட தேதியிலேயே அவருக்கு ஏற்பட்ட தனிப்பட்ட சொத்தாகும். அந்த சொத்து அவரது சுயார்ஜித சொத்து என்பதால் அதை அவர் இஷ்டப்படி அனுபவிக்கும் உரிமை கொண்டவர் ஆவார். அதில் 2, 3 பிரதிவாதிகளோ அல்லது அவர்களுக்கு பிறந்த குழந்தைகளோ பாக உரிமை கேட்டு வழக்கிட முடியாது என்பதுதான் தெளிவான சட்டநிலையாகும். மேலும் 1–ம் பிரதிவாதி

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:58:42 +0530

உயிருடன் இருக்கும்போது 2 மற்றும் 3 பிரதிவாதிகளோ, அவரது மகன்கள் என்ற காரணத்தினால் 1–ஆம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்தான 04.10.1991 தேதிய பாகப்பத்திரத்தில் "D" – அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் பாகம் கோர இயலாது. காடையாம்பட்டி காட்டுவளவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, பாரத மாநில வங்கி ஆகியவற்றில் பெற்ற கடன்களுக்கும் 2, 3 – பிரதிவாதிகளுக்கும் அல்லது அவர்களது வாரிசுகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. பிரதிவாதிகள் சொத்துக்களை மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்ய போவதாக கூறுவது பொய்யானதாகும். இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு இந்தப்பிரதிவாதிகளுக்கு முறையான ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை வாதி தரப்பில் அனுப்பப்படவில்லை. 2–ம் பிரதிவாதிக்கே வழக்கு சொத்துக்களில் எந்த உரிமையும் இல்லை என்று கூறும்போது, அவருக்கு 2/6 பாகம் உரிமை உள்ளது உள்ளது என்றும், அதில் 1/6 பாகம் மைனர் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று கூறுவதும் தவறானவையாகும். தாவாச்சொத்து இந்தபிரதிவாதியின் தனிப்பட்ட சொத்தாக இருக்கும்போது மைனர் வாதிக்கு இந்த பிரதிவாதி உயிருடன் இருக்கும்போது பிதுரார்ஜித பூர்வீக சொத்து கூறுவது சட்டப்படியும், நியாயப்படியும் ஏற்கத்தக்கதல்ல. உண்மை சங்கதிகளை வெளிப்படுத்தாமல் மறைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. இவ்வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை. எனவே வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

5. <u>மேல் முறையீட்டிற்கான முக்கியமான காரணங்கள் :–</u>

விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை சட்டத்திற்கும், பொருண்மைகளுக்கும் எதிரானது ஆகும். விசாரணை நீதிமன்றம்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:58:49 +0530

மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதியின் வழக்கை முழுமையாக கருத்திற்கொள்ளாமலும், ஆவணங்களை பரிசீலனை செய்யாமலும் வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சட்டத்தின்படியும், தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும் விசாரணை நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்திருக்க வேண்டும். விசாரணை நீதிமன்றம் வழக்கின் பிரச்சனைகளை சரியான முறையில் பரிசீலனை செய்ய தவறிவிட்டது. வாதி வழக்கு தொடுத்ததற்கான காரணத்தை நிரூபிக்கவில்லை என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது. பிரச்சனை எண்.2–ஐ தீர்மானிப்பதில் விசாரணை நீதிமன்றம் தவறிழைத்துள்ளது. 1–ம் பிரதிவாதிக்கும், ஒரு செல்லப்பனுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தமான பி.சா.ஆ.9 மற்றும் பி.சா.ஆ.10 ஆகியவற்றின் அடிப்படையில் விசாரணை நீதிமன்றம் கூறப்பட்ட பிரச்சனையை வாதிக்கு ஆதரவாக தீர்ப்பளித்துள்ளது. மேலும் பி.சா.ஆ.9 மற்றும் பி.சா.ஆ.10 தொடர்பாக பிரதிவாதிகளின் வாதத்தை விசாரணை நீதிமன்றம் நிராகரித்துள்ளது. வாய்மொழி மற்றும் ஆவண சான்றுகள் மூலம் வாதியால் ஒப்புக்கொள்ளப்பட்ட வழக்கு சொத்துக்கள் தொடர்பான கடன்கள் தொடர்பாக வாதியின் பங்குகள் பற்றி விசாரிக்க விசாரணை நீதிமன்றம் தவறிவிட்டது. வழக்கு சொத்துக்களில் கூட்டுரிமையை பெற்றதற்கான வாய்மொழி அல்லது ஆவண ஆதாரங்களை வாதி சமர்ப்பிக்கவில்லை என்பதை விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொள்ள தவறிவிட்டது. மேலும் வாதியின் தாயாரான முதல் சாட்சி தனது குறுக்கு விசாரணையிலேயே " என்னுடைய குழந்தை வயிற்றில் இருக்கும்போதே எனக்கும், 2–ம் பிரதிவாதிக்கும் பிரச்சனை என்று சொன்னால் சரிதான் என்றும், குழந்தை வயிற்றில் இருக்கும்போதே என்னுடைய தாய் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:58:57 +0530

சரிதான்" என்றும் சாட்சியம் அளித்துள்ளதையும் விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொள்ள தவறிவிட்டது. மேலும் வாதி தனது குறுக்குவிசாரணையில் " நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாகவே 2–ம் பிரதிவாதி 18.02.2015–இல் HMOP.No.35/2015 – என்ற வழக்கை மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து மேற்படி வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு மாறுதலாகி HMOP.No.137/2018 – ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளதையும் விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொள்ள தவறிவிட்டது. எனவே விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து இம்மேல்முறையீட்டு வழக்கை அனுமதிக்க வேண்டும்.

6. இந்த மேல்முறையீட்டு வழக்கானது கடந்த 03.01.2022 அன்று ஓமலூர் சார்பு நீதிமன்றத்தால் அ.வ.எண்.243/2018 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேற்படி அசல் வழக்கின் பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கை எதிர்மேல்முறையீட்டாளர் வழக்கு சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீன பரிகாரம் கோரியும், வழக்கு சொத்துக்களில் வாதிக்கு உண்டான 1/6 பாகத்தினைப் பொறுத்து மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் யாதொரு வில்லங்க பாராதீனத்தையும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி எதிர்மேல்முறையீட்டாளர்/வாதியின் தரப்பில் மைனர் வாதியின் தாயார் லலிலா வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களை குறியீடு செய்துள்ளார். மேல்முறையீட்டாளார்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1 முதல் பி.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:59:04 +0530

பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்களையும், சாட்சிய சான்றாவணம் 1 வரிசையையும் குறியீடு செய்துள்ளார்கள். இதில் பி.சா.ஆ.1 ஆவணம் வா.சா.1–இன் குறுக்குவிசாரணை மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை நீதிமன்றம் இருதரப்பிலும் முன்னிடப்பட்டுள்ள வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களை பரிசீலனை செய்து கடந்த 03.01.2022 அன்று எதிர்மேல்முறையீட்டாளர்/ வாதி கோரியுள்ளபடி பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீன பரிகாரத்தை வழங்கியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை வழங்கியும் தீர்ப்பளித்துள்ள காரணத்தினால் அதில் மனக்குறைவுற்ற பிரதிவாதிகள் இம்மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே இம்மேல்முறையீடு வழக்கில் கீழ்க்கண்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டியது அவசியமாக உள்ளது.

7. <u>மேல்முறையீட்டு வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் யாதெனில் :–</u>

| | |
|---|---|
| 1) | இவ்வழக்கு சொத்துக்கள் 1–ம் மேல்முறையீட்டாளர்/1–ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பது சரியா? |
| 2) | வழக்கு சொத்துக்கள் மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்/வாதிக்கு பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பது சரியா? |
| 3) | வழக்கு சொத்துக்களில் எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி கோரியுள்ளபடி பாகப்பிரிவினை மற்றும் சுவாதீன பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் அவருக்கு வழங்கப்படகூடியதா? |
| 4) | இம்மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கத்தக்கதா? |

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:59:10 +0530

| | |
|---|---|
| 5) | **விசாரணை நீதிமன்றத்தால் அ.வ.எண்.**243/2018 **வழக்கில் கடந்த** 03.01.2022 **அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்யத்தக்கதா**? |
| 6) | **இதர பரிகாரங்கள் என்ன**? |

8. <u>பிரச்சனைகள் 1 முதல் 3</u>:–

மேற்படி அசல் வழக்கானது மைனர் வாதி கமலேஷ்குமார் என்பவருக்காக அவரது தாயார் லலிதா என்பவரால் வழக்கு சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீன பரிகாரம் கோரியும், வழக்கு சொத்துக்களில் மேற்படி மைனர் வாதிக்கு உண்டான 1/6 பாகத்தைப் பொறுத்து பிரதிவாதிகள் யாதொரு வில்லங்க பாராதீனத்தையும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிலும் மைனர் வாதியின் தாயார் தன்னை வா.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு தனது முதல்விசாரணை சாட்சியத்திலும் தனக்கும் 2–ம் பிரதிவாதிக்கும் இருவீட்டார் சம்மதத்தின்பேரிலும், ஏற்பாட்டின் பேரிலும் 13.03.2013 அன்று திருமணம் நடைபெற்றது என்றும், மேற்படி திருமணத்திற்கு பிறகு 2–ம் பிரதிவாதி வா.சா.1 உடன் ஒருமாத காலம் மட்டுமே நல்ல முறையில் குடும்பம் நடத்தினார் என்றும் அதன்பிறகு 2–ம் பிரதிவாதியும் அவரது குடும்பத்தினரும் தன்னை பல வகைகளிலும் கொடுமைகள் செய்தார்கள் என்றும், இந்நிலையில் தனக்கும் 2–ம் பிரதிவாதிக்குமிடையே கடந்த 14.01.2014 அன்று மைனர் வாதி பிறந்தார் என்றும், மேற்படி மைனர் வாதி கறுப்பாக இருந்த காரணத்தினால் தன்னையும், மைனர் வாதியையும் பிரதிவாதிகள் குடும்பத்தினர் சேர்த்துக்கொள்ளவில்லை என்றும், தன்னையும், மைனர் வாதியையும் வீட்டைவிட்டு வெளியேற்றி விட்ட காரணத்தினால்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:59:16 +0530

வா.சா.1 27.04.2015 அன்று சேலம் மாவட்ட சமூகநலத்துறையில் புகார் செய்து அதன்பேரில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்றும், பின்னர் தீவட்டிபட்டி காவல் நிலையத்தில் வா.சா.1 ஆல் புகார் கொடுக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் மற்றும் 1-ம் பிரதிவாதியின் பெயரில் குற்ற எண்.254/2015- இல் இ.த.ச.பிரிவுகள் 498( A), 407 - இன் படிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், 2-ம் பிரதிவாதி வா.சா.1-க்கு எதிராக விவாகரத்து கோரி மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் HMOP.35/2015 - என்ற வழக்கினை தாக்கல் செய்திருந்தார் என்றும், வழக்கு சொத்துக்கள் 1-ம் பிரதிவாதி, அவரது தகப்பனார் மற்றும் 1-ம் பிரதிவாதியின் சகோதரர்களுக்கிடையே 04.10.1991- இல் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திர படிக்கு 1-ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றும், மேற்படி சொத்துக்கள் பூர்வீக கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றும், மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் 1-ம் பிரதிவாதிக்கு இவ்வழக்கு சொத்துக்கள் D - அட்டவணை சொத்துக்களாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி சொத்துகளுக்குரிய பாதை ச.எண்.195/1- இல் பொது தடமாக உள்ளது என்றும், மேற்படி வழக்கு சொத்துக்கள் வாதி மற்றும் பிரதிவாதியின் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்ற காரணத்தினால் 2-ம் பிரதிவாதிக்கு 2/6 பாகம் உரிமை உள்ளது என்றும், மேற்படி 2-ம் பிரதிவாதியின் மகன் என்ற முறையில் மைனர் வாதிக்கு 2-ம் பிரதிவாதியின் பாகத்தில் பாதி பாகமான 1/6 பாக உரிமை உள்ளது என்றும், தாவா சொத்துக்களைப் பொறுத்து பிரதிவாதிகள் காடையாம்பட்டி தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் அடமான கடனையும் பாரத ஸ்டேட் வங்கியில் ஆவண ஒப்படைவு அடமான கடனையும் பெற்றுள்ளார்கள் என்றும், வழக்கு சொத்துக்களில் வாதிக்கு உண்டான 1/6 பாகத்தை ஏமாற்றும் விதமாக பிரதிவாதிகள்

Digitally signed by R.Velaras
R.Velaras Date: 2026.03.12 17:59:23 +0530

வேறு நபர்களுக்கு வில்லங்க பாராதீனம் செய்வதற்கு ஏற்பாடு செய்து வருகிறார்கள் என்றும், இவ்வழக்கை திசை திருப்புவதற்காக 2–ம் பிரதிவாதி மைனர் வாதியை தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சேலம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த G.O.P.No.218/2016 – மனுவானது கடந்த 04.09.2019 அன்று தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றும், எனவே வாதிக்கு வழக்கு சொத்துக்களில் உண்டான 1/6 – பாகத்தை பிரித்து தனி சுவாதீன பரிகாரம் வழங்க வேண்டும் என்றும் மேற்படி வாதியின் பாகத்தைப் பொறுத்து பிரதிவாதிகள் யாதொரு வில்லங்க பாராதீனத்தையும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

9. மேற்படி வழக்கில் ஆஜரான பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையிலும் பி.சா.1 ஆக விசாரித்துக்கொண்ட 1–ம் பிரதிவாதி தனது முதல் விசாரணை சாட்சியத்திலும், மைனர் வாதி 2–ம் பிரதிவாதியின் குழந்தைதான் என்றும், ஆனால் வழக்கு சொத்துக்கள் 1–ம் பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், மைனர் வாதியின் தாயார் லலிதா வேண்டும் என்றே 2–ம் பிரதிவாதியுடன் சேர்ந்து வாழாமல் தவிர்த்து வருகிறார் என்றும், வழக்கு சொத்துக்களில் வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், இந்த வழக்கிற்கு வழக்கு மூலமும் இல்லை என்றும், வழக்கு சொத்துக்கள் பிதுராஜிய பூர்வீக சொத்துக்கள் என்று வாதியால் தெரிவிக்கப்படும் சங்கதிகள் ஏற்புடையதல்ல என்றும், எனவே வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

10. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களைப் பொறுத்து கடந்த 04.10.1991 அன்று 1–ம் பிரதிவாதி அவரது சகோதரர்கள் மற்றும் அவரது

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:59:31 +0530

தகப்பனாருக்கிடையே ஒரு பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்பதை இருதரப்பிலும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். மேற்படி 04.10.1991 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரமானது வாதியின் தரப்பில் வா.சா.ஆ.5 ஆகவும், பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.5 /பி.சா.ஆ.2 ஆவணத்தின் சாராம்சங்களை பார்க்கும்போது " **1991–ம் வருடம் அக்டோபர் மாதம் 4–ந் தேதியில் சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கூட்டப்பட்டி கிராமம், பொனக்காட்டில் வசிக்கும் முனியகவுண்டர் மகன் குருநாதகவுண்டர் .1.ஷையார் மக்கள் கோவிந்தராஜீ 2. கிருஷ்ணன், 3. முனியன், 4 ஆகிய நாம் அனைவரும் ஏகோபித்து எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் என்னவென்றால் : – நாம் அனைவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்த தகப்பன், மக்கள் ஆனபடியால் நம் அனைவரும் இதுநாள்வரை ஏக குடும்பமாக இருந்து நமக்கு பாத்தியப்பட்ட குடும்ப பொது சொத்தை நாம் பொதுவாய் அனுபவித்து வருவதில் நமக்குள் ஒற்றுமை இல்லாமல் அடிக்கடி பாக சம்மந்தமாக சண்டை சச்சரவுகளும் வீண் மனஸ்தாபங்களும் ஏற்பட்டு வருவதாலும், இனி மேலும் நாம் ஏக குடும்பமாக இருந்துவர சரிப்படாத காரணத்தினாலும் நமக்கு பாத்தியப்பட்ட குடும்ப பொது சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொள்ள வேண்டியது என்றும், தீர்மானித்து அதன்படி நம் ஊர் பஞ்சாயத்தார்களை வைத்து அவர்கள் செய்த பைசல் படிக்கு நாம் அனைவரும் அவ்விதமே இருக்க ஒப்புக்கொண்டு நம்மில் 1– லக்கமிட்டவருக்கு பிதுரார்ஜ்ஜிதமாகவும், பட்டா மூலமாகவும் பாத்தியப்பட்டு அனுபவித்து வரும் சொத்துக்களை ஏ, பி, சி, டி – ஷெட்யூல்களாக பிரிவினை செய்து பாகபத்திரம் செய்து கொண்டுள்ளோம்"** என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:59:37 +0530

என்பது தெரிய வருகின்றது. எனவே 1-ம் பிரதிவாதியும், அவரது தகப்பனாரும், அவரது சகோதரர்களும் இவ்வழக்கு சொத்துக்களும், இதர சொத்துக்களும் அவர்களது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பிதுரார்ஜித கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்று ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் மேற்படி சொத்துக்களில் இருந்து வழக்கு சொத்துக்களை பாகமாக பெற்ற 1-ம் பிரதிவாதி அந்த சொத்து தனக்கு மட்டுமே பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்று வாதிடுவது ஏற்புடையதாக இல்லை. இவ்வழக்கில் பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட கூ.குட்டப்பட்டி கிராம நிர்வாக அதிகாரி மேற்படி வழக்கு சொத்துக்கள் பட்டா எண்.1154 மற்றும் 1157 -க்கு சம்பந்தப்பட்டது என்றும், இதில் பட்டா எண்.1157 கொண்ட சொத்து 1-ம் பிரதிவாதியின் பெயரிலும், பட்டா எண். 1154 - கொண்ட சொத்து 1-ம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி பெயரிலும் உள்ளது என்றும், சர்வே எண்.195/3B2- இல் ஒரு சதுர கிணறும், ஒரு ஆள்துளை கிணறும் 1-ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றும், மேற்படி சொத்துக்கள் 1-ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் உள்ளது என்றும் தெரிவித்து சாட்சி சான்றாவணம் 1 வரிசையாக வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்திருந்தபோதிலும் மேற்படி சொத்துக்கள் 1-ம் பிரதிவாதிக்கு பிதுரார்ஜித கூட்டுக்குடும்ப சொத்துக்களாக இருந்து கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் என்ற காரணத்தினால் மேற்படி வருவாய் ஆவணங்களின் அடிப்படைக்கு 1-ம் பிரதிவாதி வழக்கு சொத்துக்கள் தனக்கு மட்டுமே பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று கட்சி செய்ய இயலாது.

11. வழக்கு சொத்துக்களில் பின்னிட்டு சீர்திருத்தம் செய்ய வேண்டி கிணறு வெட்டப்பட்டதாகவும், வரப்புகள் அமைத்து கல்கட்டு கட்டப்பட்டதாகவும் அதற்கான செலவினங்களை 1-ம் பிரதிவாதிதான் கொடுத்தார் என்பதற்கும் இவ்வழக்கில் பி.சா.4

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:59:46 +0530

ஆக ஒரு செல்லப்பன், பி.சா.5 ஆக செந்தில்குமார், ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி பி.சா.4 மற்றும் பி.சா.5 தங்களது சாட்சியங்களில் பி.சா.1–இன் கட்சியை அனுசரித்து அதனை வெளிப்படுத்தும் விதமாக சாட்சியம் அளித்திருந்தபோதிலும் வழக்கு சொத்துக்களில் கிணறு வெட்டியும், ஆள்துளை கிணறு அமைத்தும், பின்னிட்டு மேம்பாடுகள் செய்தும் 1–ம் பிரதிவாதி அனுபவித்து வந்துள்ள காரணத்தினால் வழக்கு சொத்திலிருந்து வந்துள்ள வருமானத்தையும் 1–ம் பிரதிவாதியும், இதர பிரதிவாதிகளும் அடைந்து அனுபவித்துள்ளார்கள் என்பதை தெரிந்து கொள்ள முடிகின்றது. எனவே, மேற்படி வழக்கு சொத்துக்களில் அபிவிருத்திகள் செய்து வந்தபோதிலும் அந்த அபிவிருத்திக்கான செலவுகளை மேற்படி வழக்கு சொத்துக்களிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தில் இருந்து பிரதிவாதிகள் எடுத்துக்கொண்டிருப்பார்கள் என்ற காரணத்தினால் பின்னிட்ட அபிவிருத்தி செலவுகள் இவ்வழக்கிற்கு அவசியமற்றவையாக உள்ளது. இவ்வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் 1–ம் பிரதிவாதி பல்வேறு கடன்களை வாங்குவதை வாடிக்கையாக கொண்டுள்ளார் என்பதை பி.சா.1– இன் குறுக்குவிசாரணை சாட்சியமானது வெளிப்படுத்தக்கூடிய வகையில் உள்ளது. எனவே, வழக்கு சொத்துக்கள் பிதுரார்ஜித கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்ற காரணத்தினால் வாதிக்கு உண்டான பாகத்தை ஏமாற்றும் விதமாக பிரதிவாதிகள் செயல் படுகிறார்கள் என்று வாதியின் தரப்பில் தெரிவிக்கப்படும் வாதம் ஏற்புடையதாக உள்ளது.

12. மேற்படி வழக்கு சொத்துக்கள் 1–ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்று 1–ம் பிரதிவாதியின் தரப்பில் கட்சி செய்யப்பட்டு வந்தபோதிலும், மேற்படி வா.சா.ஆ.5 /பி.சா.ஆ.2 ஆவணமே 1–ம் பிரதிவாதிக்கும், அவரது குடும்பத்தாருக்கும்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:59:52 +0530

பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்று வெளிப்படுத்துகின்ற காரணத்தினால் பி.சா.ஆ.8 ஆவணத்தின் படிக்கும், சாட்சி சான்றாவணம் 1 வரிசை ஆவணத்தின் அடிப்படைக்கும் வழக்கு சொத்துக்கள் 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் என்று வாதிடுவது ஏற்புடையதல்ல. மேற்படி வழக்கு சொத்துக்கள் வாதி மற்றும் பிரதிவாதிகள் அடங்கிய கூட்டுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்ற காரணத்தினால் 1–ம் பிரதிவாதி மேற்படி பாகப்பிரிவினை தேதி முதல் வழக்கு சொத்துக்களில் தனிப்பட்ட முறையில் சுவாதீனத்தில் இருந்து வருவதாக பி.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட கரிகாலன் தனது சாட்சியத்தில் தெரிவித்திருந்த போதிலும் அது 1–ம் பிரதிவாதியின் கட்சிக்கு எவ்வகையிலும் வலு சேர்க்கக்கூடியதல்ல. எனவே வழக்கு சொத்துக்கள் 1–ம் பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் அல்ல என்றும், வழக்கு சொத்துக்கள் வாதி மற்றும் பிரதிவாதிகள் அடங்கிய கூட்டு குடும்பத்திற்கு வாத்தியப்பட்ட பிதுரார்ஜித சொத்துக்கள் என்றும், வழக்கு சொத்துக்களில் எதிர்மேல்முறையீட்டாளர்/வாதிக்கு 1/6 பாக உரிமை உள்ளது என்றும், மேற்படி வாதிக்கு உண்டான 1/6 பாகத்தினை மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் பிரித்து தனி சுவாதீனம் வழங்க கடமை பட்டுள்ளார்கள் என்றும், மேற்படி வாதிக்கு அவரது பங்கினை ஒதுக்கீடு செய்து தனி சுவாதீனம் வழங்கப்படும் வரையில் அவரது பாகத்திற்கு எவ்வகையிலும் பாதகம் மற்றும் குந்தகம் ஏற்படும் வகையில் யாதொரு வில்லங்க பாராதீனத்தையும் பிரதிவாதிகள் ஏற்படுத்தக்கூடாது என்று எதிர்மேல்முறையீட்டாளர்/வாதியால் கோரப்படும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு வழங்கப்படக்கூடியது என்றும் முடிவு செய்து பிரச்சனைகள் 1 முதல் 3

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:59:58 +0530

வரையிலானவற்றிற்கு தீர்வு காணப்படுகிறது.

13. <u>பிரச்சனைகள் 4 மற்றும் 5</u> :–

மேற்படி வழக்கு எதிர்மேல்முறையீட்டாளர்/வாதியால் பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீன பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை நீதிமன்றம் வாதிக்கு பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீன பரிகாரத்தை வழங்கியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை வழங்கியும் கடந்த 03.01.2021 அன்று வாதியின் வழக்கை அனுமதித்து தீர்ப்பளித்துள்ளது. மேற்படி வழக்கு சொத்துக்கள் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்றும், வாதிக்கு வழக்கு சொத்துக்களில் 1/6 பாக உரிமை உள்ளது என்றும், மேற்படி வாதிக்கு உண்டான பாகத்தைப் பொறுத்து பாதகம் அல்லது குந்தகம் ஏற்படும் வகையில் பிரதிவாதிகள் யாதொரு வில்லங்க பாராதீனத்தையும் ஏற்படுத்தக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு வழங்கபடக்கூடியது என்றும் இந்நீதிமன்றத்தால் இதற்கு முந்தைய பத்திகளில் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை நீதிமன்றம் இரு தரப்பிலும் முன்னிடப்பட்டுள்ள வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களை சரியான முறையில் சீர்தூக்கி பார்த்து வழக்கு சொத்துக்கள் 1–ம் பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் அல்ல என்றும், வழக்கு சொத்துக்கள் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்றும் வழக்கு சொத்துக்களில் வாதிக்கு 1/6 பாக உரிமை உள்ளது என்றும், மேற்படி 1/6 பாகத்தினை பொறுத்து பாதகம் ஏற்படுத்தக்கூடிய வகையில் பிரதிவாதிகள் யாதொரு வில்லங்க

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 18:00:08 +0530

பாராதீனத்தையும் ஏற்படுத்தக்கூடாது என்று வாதிக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை வழங்கியும் சரியான முறையில் வாதியின் வழக்கை வாதியின் செலவு தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளித்துள்ள காரணத்தினால் மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்யவேண்டிய அவசியமோ, அல்லது மாற்றியமைக்க வேண்டிய அவசியமோ இந்நீதிமன்றத்திற்கு ஏற்படவில்லை. இம்மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்வதற்காக மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகளால் இம்மேல்முறையீட்டு வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ள மேல்முறையீட்டிற்கான காரணங்கள் ஏற்புடையதல்ல. மேற்படி காரணங்கள் இம்மேல்முறையீடு தாக்கல் செய்ய வேண்டும் என்ற காரணத்திற்காகவே பிரதிவாதிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மேல்முறையீட்டு வழக்கை அனுமதிக்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும் இம்மேல்முறையீட்டு வழக்கு நிலைக்க கூடியதல்ல மற்றும் தள்ளுபடியாக கூடியது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே விசாரணை நீதிமன்றத்தால் கடந்த 03.01.2022 அன்று வழங்கபட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்யப்படகூடியதல்ல என்றும் மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்படவேண்டியது என்றும் எனவே இம்மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடியாகத் தக்கது என்றும் முடிவு செய்து பிரச்சனைகள் 4 மற்றும் 5-க்கு தீர்வு காணப்படுகிறது.

14. <u>பிரச்சனை எண்.6</u> :-

இதர பரிகாரங்களை பொறுத்தவரையில் இந்த மேல்முறையீட்டு வழக்கு செலவுத் தொகையை எதிர்மேல் முறையீட்டாளர்/வாதிக்கு மேல்முறையீட்டாளர்/பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என்றும் முடிவு செய்து பிரச்சனை எண்.6-க்கு தீர்வு

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 18:00:15 +0530

காணப்படுகிறது.

முடிவில், இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. ஓமலூர், சார்பு நீதிமன்றம் அசல் வழக்கு எண்.243/2018–ல் 03.01.2022–ம் தேதியன்று பிறப்பித்துள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை உறுதிசெய்து இம்மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இந்த மேல்முறையீட்டு வழக்கு செலவுத் தொகையை எதிர் மேல்முறையீட்டாளர்/வாதிக்கு மேல்முறையீட்டாளர்/பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12ம் தேதியான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 18:00:23 +0530

தலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

நகல்:
சார்பு நீதிபதி, ஓமலூர்